STC.No. 11–2025

நாள் 05.02.2026.

P.W.2 – (சுந்தரம் மகாலிங்கம் )

புகார்தாரர் ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர்.

எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நான் புகார்தாரரின் மருமகன் ஆவேன். நான் புகார்தாரரின் மகளை திருமணம் செய்துள்ளேன். புகார்தாரர் எனக்கு தாய்மாமா ஆவார். எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. என் மாமா குருசாமி என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். என்னை எதற்காக நீதிமன்றத்திற்கு அழைத்ததாக புகார்தாரர் சொன்னாரா என்றால் நடந்த விசயத்தை சொல்லப்பா என்று சொன்னார். என் மாமா குருசாமி கேபிள் தொழில் மற்றும் நிலத் தரகர் தொழில் செய்கிறார். நான் புகார்தாரர் குருசாமி நடத்தும் கேபிள் தொழிலில் நான் அவரிடம் வேலை பார்க்கிறேன். அவரிடம் நான் 15 ஆண்டுகளாக வேலை பார்க்கிறேன். நான் 15 ஆண்டுகளாக வேலை பார்ப்பதால் எனக்கு புகார்தாரரின் நண்பர்கள் மற்றும் பழக்க வழக்கம் ஓரளவிற்கு தெரியும் என்றால் ஆம். என் மாமாவிற்கு எவ்வளவு வருமானம் வரும் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் மாமா யாருக்கு பணம் கொடுத்துள்ளார் யார் எவ்வளவு வட்டி செலுத்தவேண்டும் என்ற விபரம் எனக்கு முழுமையாக தெரியுமா என்றால் தெரியாது.

என் மாமா இராஜபாளையத்தை சேர்ந்த ராதா கிருஷ்ணன் என்பவருக்கு 27.09.2021 அன்று கடன் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் ராதாகிருஷ்ணன் என்பவரை பார்த்தது இல்லை. எதிரியின் மனைவி மற்றும் பிள்ளைகள் பெயர் எனக்கு தெரியாது. நான் எதிரியை ஒரே ஒரு முறை பார்த்துள்ளேன். நான் எதிரியை பார்த்ததாக சொல்லும் தேதிக்கு முன் பார்த்தது இல்லை. அதனால் என் மாமா சொல்லிதான் அவரை தெரியும் என்றால் சரி. நான் புகார்தாரருடன் புகார்தாரர் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்றது இல்லை. நான் 09.05.2024 அன்று புகார்தாரர் எதிரிக்கு புகார்தாரரின் வீட்டில் வைத்து பணம் கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. சாட்சி தற்போது புகார்தாரர் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு இந்த விசயமாக ஒரு முறை சென்றதாக தெரிவித்தார். நான் அவ்வாறு என்று சென்றேன் என குறிப்பிட முடியுமா என்றால் கடந்த மாதம் சென்றேன். தேதி குறிப்பிட்டு சொல்ல முடியாது. கடந்த வழக்கு விசாரணை தேதிக்கு முன்பு சென்றேன்.

என் மாமா புகார்தாரருக்கும் எதிரிக்கும் உள்ள கொடுக்கல் வாங்கல் நேரடியாக தெரியாது என்றால் பணம் கொடுத்தது தெரியும். கொடுக்கல் வாங்கல் விபரங்கள் தெரியாது. நான் புகார்தாரர் பணம் கொடுத்ததாகவும் எதிரி அந்த சமயம் காசோலை கொடுத்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் புகார்தாரர் என் தாய்மாமா என்பதாலும் நான் அவரிடம் வேலை பார்ப்பதாலும் அவருக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

K. Sundaramahalingam.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

6/2/26

நீதித்துறை விரைவு நடுவர்.
திருவில்லிபுத்தூர்.